# முரசொலி

பக்கங்கள் நான்கு　　விலை ரூபா; 5-00

முரசு 05 ஒலி 222　ஆங்கீரச　ஆனி 22 (06.07.1992) திங்கள்


## விமானம் வீழ்ந்த செய்தி; நகரில் மக்கள் ஆரவாரம்

புல்லாவெளியில் சிறிலங்கா படைகளுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் யுத்தச் செய்திகளை செவிமடுக்க நேற்று இரவு யாழ் நகரில் ஒலி பெருக்கிகள் அருகே பெருமளவு மக்கள் கூடியிருந்தனர் இரவு 8-30 மணியளவில் புலிகளால் விமானப்படையின் வை-8 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போது கூடி நின்ற மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து தமது உணர்வை வெளிப்படுத்தியதை நேரில் காணக்கூடியதாக இருந்தது. சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் இருந்ததையும் அவதானிக்க முடிந்தது　(07)

★ விமானத்தின் பாகங்கள், விமானியின் சடலம் மீட்பு

# Y-8 விமானப் படை விமானம்

# நேற்று சுட்டு வீழ்த்தப்பட்டது!

## கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது

விடுதலைப்போராட்ட வரலாற்றில் தமிழீழ மண்மீட்பிற்காக தமது உயிரை அர்ப்பணித்த கரும்புலிகளின் தினம் நேற்று யாழ்குடாவில் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

கப்டன் மில்லர், லெப்டினன்ட் கேணல் போர்க் உட்பட எண்மரின் திருவுருவப்படங்கள் நேற்று யாழ்குடாவில் உள்ள பல இடங்களில் வைக்கப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டிருந்தன.

நேற்று பலாலிவீதி இலுப்பையடிச்சந்தியிலும், ஒட்டுமடத்திலும் கரும்புலிகளின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன

இரவு மானிப்பாய் மாவீரர் கலை அரங்கிலும், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் தென்மராட்சியிலும் கரும்புலிகள் நினைவுக்கூட்டங்கள் இடம்பெற்றன,　07

## மருதங்கேணியில் பீரங்கித் தாக்கு குடும்பஸ்தர் காயம்

மருதங்கேணிப் பகுதியில் கடற்படைக் கப்பல்களின் பீரங்கித் தாக்குதலால் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார் பல வீடுகள் சேதமடைந்துள்ளன

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இச்சம்பவத்தில் காயமடைந்தவர் மருதங்கேணியைச் சேர்ந்த கந்தையா தங்கவேலாயுதம் 48) என்னும் குடும்பஸ்தர் ஆவார்.

இச்சம்பவத்தில் அப்பகுதியில் உள்ள பல வீடுகளும் சேதமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.　(24)

★ வெற்றிலைகேணியிலிருந்து

## 10 கிலோ நிறையான ஷெல்கள் ஏவப்படுகின்றன

வெற்றிலைக்கேணியிலிருந்து குடியிருப்புக்களை நோக்கி எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களினால் சில குண்டுகள் செம்பியன்பற்று, நாகர்கோவில், தாளையடி, மருதங்கேணி ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன:

சில வெடிக்காத குண்டுகள் அப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இக்குண்டுகள் 1½ அடி நீளமுள்ளது. சுமார் 10 கிலோ எடையுள்ளவை.　24

## ஊரியான் பாதையில் தொடர்ந்து ஹெலி தாக்கு

ஊரியான் பகுதி யூடாக நேற்று முன்தினம் மாலை வேளையில் அப்பகுதியால் வந்து கொண்டிருந்தவர்களை நோக்கி ஹெலிகொப்டர் தாழ்வாகப்பறந்த நிலையில் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டிருந்தது.

இதனால் பலர் தவழ்ந்து பல சிரமப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர் என்று தெரிவித்தனர்

மேலும் பலர் பற்றைக்காடுகளுக்குள் ஒளித்து உரைசல் காயங்களுடன் வந்து சேர்ந்துள்ளனர்.

★ கோர்க்காளி மொழி

## சேர்க்கப்படாமை பற்றி சுபாஷ் கிஷிங் அதிருப்தி

இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் நேபாளி மொழியைச் சேர்த்துக் கொள்வது பற்றி ஆராய சிக்கிம் மாநில முதலமைச்சர் நார் பகதூர் பண்டாரி கூட்டம் ஒன்றை கூட்டியுள்ளார்.

இக்கூட்டத்திற்கு மேற்கு வங்காள அதிகாரிகள் அழைக்

—04 ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் விமான எதிர்ப்பு பிரிவினரின் தீரமிகு சாதனை

ஸ்ரீலங்கா விமானப்படையினரின் சீனத்தயாரிப்பான வை - 8 விமானம் நேற்றுமாலை விடுதலைப்புலிகள் விமான எதிர்ப்புப் படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டது புல்லாவெளி யுத்த முனையில் நேற்று மாலை 4.45 மணியளவில் இந்த வெற்றிகரச் சாதனை நிகழ்த்தப்பட்டது.

நேற்று புல்லாவெளியில் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே கடும் மோதல் இடம் பெற்றுக் கொண்டிருந்தது. இவ்வேளையில் படையினருக்கு உதவியாக விமானப்படை விமானங்களும் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தன.

இதன்போது நான்கு ஜெட் எஞ்ஜின்கள் கொண்ட வை-8 ரக விமானம் பீப்பாய்க் குண்டுகளை கண்ட படி வீசித்தள்ளியபடியிருந்தது. இவ்விமானத்தை குறிவைத்த புலிகளின் விமான எதிர்ப்புப் படையினர் அவ் விமானம் தமது சுடுகல ஆயுதத்தின் இலக்கினுள் வந்த போது அதை வெற்றிகரமாக சுட்டு வீழ்த்தினர்

—04 ஆம் பக்கம் பார்க்க

### வீரச்சாவு

புல்லாவெளியில் நேற்று விமானப்படை விமானம் வீழ்த்தப்பட்ட தாக்குதலில் தமிழினியன் (எ. ஆனந்தவேல். சுழிபுரம்) வீரச்சாவு எய்தினார்.

## மிக உயரத்திற்கு சென்று நேற்று விமானங்கள் தாக்கு

நேற்று மாலை விமானப் படையினரின் வை 8 விமானம் வீழ்த்தப்பட்டதையடுத்து விமானங்களும் ஹெலிகப்டர்களும் மிக உயரத்திற்கு சென்றே தாக்குதலை நடத்தியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன,

நேற்று இரவு இப்பகுதியில் விமானத் தாக்குதல் குறைந்திருந்ததுடன் படையினர் ஷெல் தாக்குதலை மட்டுமே தொடர்ந்து மேற்கொண்டவண்ணமிருந்தனர்.　(07)

## இராணுவ இழப்புகளை மறைக்க கொழும்பு தினசரிகள் முயற்சி

குடாநாட்டை இராணுவம் கைப்பற்றி விட்டதான ஒரு எண்ணத்தை ஏற்படுத்தும் வகையில் கடந்த வாரம் முழுவதும் கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டு வந்தனவாம்.

இத்தகைய செய்திகளை அரசகட்டுப்பாட்டிலுள்ள டெய்லி நியூஸ், எதிரணிப் பத்திரிகையான ஐலண்ட் என்பன வெளியிட்டு வருகின்றன

புலிகளின் தலைவர் இந்தியா சென்று விட்டாராம் அல்லது இலங்கையில் தான்

= 04 ஆம் பக்கம் பார்க்க

# புல்லாவெளி மோதல் 2 டாங்கிகள் சேதம்

புல்லாவெளிப் பகுதியிலிருந்து நேற்றுக்காலை பலத்த விமானத்தாக்குதலுடன் படையினர் முன்னெற முற்பட்ட போது அப்பகுதியில் கடும் மோதல் வெடித்தது புலிகளின் தாக்குதலில் படையினரின் 2 டாங்கிகள் முற்றாக சேதமடைந்தன.

இத்தாக்குதலில் படையினர் தரப்பில் பலத்த உயிர் சேதமும் ஏற்பட்டுள்ளது மாலையில் மோதல் கடுமையாக இடம் பெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

கடும் விமானத்தாக்குதலின் உதவியுடன் முன்னேறிய படையினர் கண்ணிவெடி மிதிவெடிகளில் சிக்கியும் நிலை குலைந்தனர்.　07, 24

★ பிளவைத் தடுக்க நடவடிக்கை

# சு. க. நிர்வாகிகள் தெரிவு மீண்டும் ஒத்திவைப்பு!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நிர்வாகிகள் தெரிவு மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் பதவிகளுக்குப் பலர் போட்டி என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி நடைபெறவிருந்த இத் தெரிவுக் கூட்டம் காலவரையறையின்றி மீண்டும் பின்போடப்பட்டுள்ளது. தலைவர் பதவி உட்பட ஏனைய சகல பதவிகளுக்கும் போட்டியிட பலர் முன்வந்திருப்பதால் கட்சி அங்கத்தவர்கள் மத்தியில் பிளவு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவே இரண்டாம் முறையாகவும் இக் கூட்டம் பின்போடப்பட்டுள்ளதாகத் தெரிவதாகவும் இச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க கட்சியின் நிர்வாகக் குழுவுக்குத் தன் புதல்வி சந்திரிகா குமாரணதுங்கவை நியமித்துள்ளதாக மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

## பி.ஜே.பி, ஜனதாதள் முன்னறிவித்தல்

# ராவ் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

பிரதமர் பி.வி. நரசிம்மராவ் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரப் போவதாக பாரதீய ஜனதாக்கட்சியும், ஜனதாதளும் தனித் தனியாக அறிவித்தல் விடுத்துள்ளன.

இவை எதிர்வரும் பாராளுமன்ற மழைகாலக் கூட்டத்தொடரில் கொண்டு வரப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாரதீய ஜனதாக் கட்சி சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே. அத்வானி உட்பட்கட்சியின் 5 உறுப்பினர்கள் இத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததாக பி.ரி.ஐ. தெரிவித்தது.

ஜனதா தள் தீர்மானம் கட்சித் தலைவர்கள் ராம் விலாஸ் பாஸ்வான், சிறிகன் ஜெனா ஆகியோரால் கொண்டு வரப்பட்டது.

தேசிய முன்னணியின் மற்றும் உறுப்புக் கட்சிகள், இடதுசாரிக் கட்சிகளின் சார்பிலான அறிவித்தல்கள் தொடரும் என பாஸ்வான் கூறியுள்ளார்.

பாரதீய ஜனதாக் கட்சி, தேசிய முன்னணி, இடதுசாரிக் கூட்டணி பரஸ்பரம் ஒருவர் மற்றவரது தீர்மானத்துக்கு ஆதரவு தருவார்களா என்பது இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை என்று புதுடில்லி செய்திகள் தெரிவித்தன.

அரசின் மக்கள் விரோதக் கொள்கை அந்நிய நிறுவனங்களை அரச கட்டுப்பாடின்றி நாட்டில் அனுமதித்தல் பல கோடிக்கணக்கான ரூபா சம்பந்தப்பட்ட வங்கி மற்றும் பங்குச் சந்தை ஊழல், கட்டுப்படுத்த இயலாத பணவீக்கம், ஹரிஜன மக்களுக்கு எதிராக நடந்துள்ள வன்முறை என்பன ராவ் அரசு பதவி விலகப் போதுமான காரணங்களென எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

ராவ் பதவியேற்றபின் அவருக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள முதலாவது நம்பிக்கையில்லாத தீர்மானம் இதுவேயாகும்.

# குஜராத்தில் குழப்ப நிலை இருவர் எரித்துக் கொலை

குஜராத்தில் வன்முறைச் சம்பவங்கள் நேற்று முன்தினம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

விஸ்வ ஹிந்து பரிஷத் விடுத்த வேலை நிறுத்த அழைப்பையடுத்து வன்முறைகள் ஏற்பட்டன.

ரிக்ஷோ ஒன்றுக்கும் பஸ் ஒன்றுக்கும் தீ வைத்ததில் இருவர் கருகி மடிந்தனர்.

கத்திக்குத்து கல்லெறிச் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

# தெ.ஆபிரிக்க ஜனாதிபதி யோசனை நிராகரிப்பு

தென்னாபிரிக்காவில் ஜனநாயகத்தை எட்டுவதற்கான பேச்சுவார்த்தைகள் உடனடியாக நடத்தப்படவேண்டும் என்ற ஜனாதிபதி டிகிளார்க்கின் யோசனையை ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா நிராகரித்துவிட்டார்.

ஜொகனஸ்பேர்க்கில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் கட்சியின் இத் தீர்மானத்தை வெளியிட்டார்.

# சவூதி இளவரசி மீது இலங்கைப் பெண் வழக்கு

இலங்கைப் பணிப் பெண்ணைத் துன்புறுத்திய சவூதி இளவரசிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க ஹோட்டல் ஒன்றில் பிரஸ்தாப இளவரசியால் அடிமையைப் போல் வைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்ட இலங்கையைச் சேர்ந்த சிறியாணி மரியான் பெர்னாண்டோ ஹோட்டலை விட்டு தப்பியோடினாராம்.

பிரஸ்தாப இளவரசிக்கு எதிராக வழக்கறிஞர் ஒருவர் மூலம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இங்கு தகவல் வெளியாகியுள்ளது.

★ போஷாக்கு உணவு விளக்கம்

# சுழிபுரத்தில் கண்காட்சி கருத்தரங்குக்கு ஏற்பாடு

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் மக்கள் மத்தியில் போஷாக்கு உணவு பற்றிய அறிவையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் முகமாக போஷாக்கு உணவு பற்றிய இரு நாள் கண்காட்சியும், கருத்தரங்கும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் இம் மாதம் 10-ம், 11-ம் திகதிகளில் நடத்தப்படவுள்ளன.

மானிப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரி அலுவலகத்தினால் நடத்தப்படவுள்ள இக் கண்காட்சியில் உள்ளூரிலுள்ள மூலப்பொருள்களை கொண்டு தயாரிக்கப்பட்ட போஷாக்கு மிக்க உணவுப் பொருள்களின் செய்முறைப் பயிற்சியும் நடைபெறவிருப்பதாக இது பற்றி தெரிவிக்கப்படுகின்றது. 13

# கடும் எதிர் தாக்குதல்

கிளிநொச்சி பெரிய பச்சிலைப்பள்ளி பகுதியில் பாதுகாப்புப் படையினர் விடுதலைப்புலிகளின் கடும் எதிர்த் தாக்குதலைச் சந்திக்கவேண்டியுள்ளதாகக் கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# கோவை மகேசன் காலமானார்

தமிழரசுக்கட்சியின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரும் 'சுதந்திரன்' ஆசிரியருமான கோவை மகேசன் தமிழகத்தில் சுகவீனம் காரணமாக காலமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அன்பளிப்பு

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் கிளை தமது பிரிவிலுள்ள அச்சுவேலி தெற்கு கிராமசேவையாளர் கிளைக்கு இரண்டு தையல் மெஷின்களை வழங்கியுள்ளது.

அப்பகுதியில் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளம் யுவதிகளுக்கு சுய தொழில் வாய்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு தையல் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. 06

# சங்கரத்தையில் இன்று

வட்டுக்கோட்டை சங்கரத்தை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் ஆனி உத்தர உற்சவத்தை முன்னிட்டு இன்று 6 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு "காத்தவராயன்" புராண நாடகம் நடைபெறவுள்ளது. 13

# மெய்வல்லுநர் போட்டி

சுழிபுரம் சௌந்தரணிப் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றபோது சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாலயம் முதலாமிடத்தையும், பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமான் வித்தியாலயம் இரண்டாமிடத்தையும் பெற்றது.

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு எஸ். வி. மகேசவேலு இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். 13

# ஓய்வூதியம் வழங்கப்பட்டது

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான ஜூன் மாத ஓய்வூதியம் பணமாக இவ் வாரம் வழங்கப்பட்டுள்ளது. 13

# யுத்தம் விரைவில் முடிந்து விடும் என்கிறார் ஜனாதிபதி

"யுத்தம் விரைவில் முடிந்து விடும்" என்று ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க கூறியதாக கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்றுச் செய்திவெளியிட்டுள்ளது.

"வடக்குக், கிழக்கு மக்களின் கருத்தைக் கம் உதாவ மூலம் அறிந்தேன். யுத்தம் விரைவில் முடிந்துவிடும், கம் உதாவ கண்காட்சி நடத்துவதன் மூலம் ஒரு சர்வஜன வாக்கெடுப்பையே நாம் நடத்துகிறோம் என்று கூறலாம். இங்கு வரும் மக்களின் கருத்துக்களை நாம் கேட்டறிகின்றோம். அவர்களின் விருப்பு வெறுப்புக்களை எம்மால் அறிய முடிகிறது" என்று அவர் தெரிவித்ததாக இச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# ஸ்ரீலங்கா தூதுக்குழு இந்தோனேஷியா செல்லும்

ஸ்ரீலங்காவுக்கும், இந்தோனேஷியாவுக்கும் இடையிலான விமான சேவைபற்றி பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான 12 வருடகால விமான சேவை உடன்படிக்கை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க தலைமையில் தூதுக் குழு ஒன்று இன்று ஜாகர்த்தா செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ சு. க. எம். பி. விவகாரம்:

# பொலிஸ் அதிகாரிகள் சபாநாயகரை சந்திப்பர்

திருகோணமலை மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பியான டி. குணசேகர மீது விரைவில் வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளதாகப் பொலிஸார் சபாநாயகர் எம். எச். மொஹமட்டிடம் தெரிவிக்கப்போவதாக கொழும்புச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

இதன் பொருட்டு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் சபாநாயகரை இவ்வாரம் சந்திக்கவுள்ளதாகவும் இச்செய்திகள் தெரிவித்தன.

# மந்திரிகள், எம்.பிக்கள் இரவில் நெல் அறுவடை

அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள், எம். பிக்கள் ஆகியோர் இரவவேளை நெல் அறுவடையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிராம எழுச்சிக் கண்காட்சியில் உள்ள வயலில் இவர்கள் இரவு பத்து மணியளவில் நெல் அறுவடையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கைதடி பழனிக்கு பாராட்டு

# தமிழீழத்தின் புகழை கடல் கடந்தும் பரப்பியவர்

"தமிழீழத்தின் புகழை கடல் கடந்தும் பரப்புவதில் நமது கலைஞர்கள் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளனர். இந்த வகையில் தவில் மேதை கைதடி கே. பழனி அவர்கள் புகழ்பூத்த ஒருவராக மிளிர்கிறார். ஆற்றலுள்ள கலைஞர்களை அவர்கள் வாழும் காலத்திலேயே கௌரவிக்க வேண்டும்"

இவ்வாறு பிரபல தவில் வித்துவான் கைதடி பழனி மலைக்குக் கைதடியில் அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது அவருக்குத் தங்கப் பதக்கமும் அளிக்கப்பட்டது.

கைதடி மேற்கு முத்துக்குமாரசுவாமி கோவிலில் கைதடி சைவ ஐக்கிய சங்க சார்பில் இப் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

பாராட்டுப் பத்திரங்களும் வழங்கப்பட்டதுடன் அறிஞர்கள் பலரின் உரைகளும் இடம்பெற்றன.

காரைநகர்-சுழிபுரம் பகுதியில்

# நேற்றுக் கடற்படை கடும் பீரங்கித் தாக்குதல்

காரைநகர்-சுழிபுரம் கடல் பகுதியில் நேற்றுக் காலை 6.15 மணியளவில் ரோந்து சுற்றுவதில் ஈடுபட்டிருந்த ஸ்ரீலங்கா கடற்படைப் படகிலிருந்து கரைப் பகுதியை நோக்கி சரமாரியான பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இக் கடற்கரையில் சிலர் மீன் பிடித்துக்கொண்டிருந்ததாகவும், இவர்களை நோக்கியே இத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இது பற்றி அறியவருகின்றது. தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (13)

# கிரிக்கெட், உதைபந்தாட்ட போட்டிகளுக்கு ஏற்பாடு

கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம் அதன் 21 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சரமந்தாட்டம் (செற்றுப் ஓவர்கேம்) மட்டுப்படுத்தப்பட்ட பந்து மாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி, உதைபந்தாட்டப் போட்டி ஆகிய பல விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளது.

யாழ் மாவட்ட ரீதியில் நடைபெறவுள்ள இப் போட்டிகளில் யாழ் மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழகங்கள் யாவும் பங்கு பற்றலாம். என்று இப் போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் சனசமூக நிலையத் தலைவர் திரு. கே. தியாகராசாவுடன் இம் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பதாக தொடர்பு கொள்ளும் படியும் தெரிவிக்கப்படுகின்றது. (16)

# பலவேகய -2 நடவடிக்கை இது உயரதிகாரி கருத்தாம்

"பாதுகாப்புப் படையினர் எதிர்பார்த்த காலத்தை விட முன்னதாகவே யாழ்ப்பாணத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்பதை நடைபெற்று வரும் பலவேகய -2 நடவடிக்கை உணர்த்துவதாக அந் நடவடிக்கைக்குப் பொறுப்பான உயர் இராணுவ அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் கூறியதாக கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

# மாணவர் கல்வி பாதிப்பு

கோப்பாய் பகுதி மாணவர்கள் இரவுக் கூட்டுப் படிப்பை மேற்கொள்வதற்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு வழங்கப்பட்ட ஜெனரேட்டருக்கு மண்ணெண்ணெய் இல்லாததால் மாணவர்கள் பெரும் கஷ்ட நிலை அடைந்துள்ளதாகத் தெரியவருகிறது. இந்த ஜெனரேட்டருக்கு மண்ணெண்ணெய் பெறுவதற்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் முயற்சி எடுத்துள்ளார். (06)

# மெய்வல்லுநர் போட்டி

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட மட்டத்திலான கனிஷ்ட பிரிவு மெய்வல்லுநர் போட்டிகள் 7 7 92 இல் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசனின் தலைமையில் நடைபெறவுள்ளன.

பண்டத்தரிப்புக் கோட்டத்திலுள்ள பத்துக் கொத்தணிகளிலுமுள்ள பாடசாலைகளின் கனிஷ்ட பிரிவு மாணவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ளனர்.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் திரு. வி. முருகேசு இப் போட்டிகளுக்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார். 18

# நீரிழிவு நோய்; மருத்துவ அறிவுரை

பாகற்காய் சூப் நீரிழிவு நோய்க்கு மிகவும் நல்லது. இந்நோய் ஆரம்ப நிலையில் உள்ளவர்கள் தினசரி ஒரு தம்ளர் பாகற்காய் சூப் அருந்தி வந்தால் நோய் குணமாகிவிடும்.

பப்பாளிப்பழத்தையும், கொய்யாப்பழத்தையும் தினசரி உண்டு வந்தால் இந்நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

முள்ளங்கியை தேங்காய் போல் துருவி எடுத்து அத்துடன் பசுநெய், தேன். கற்கண்டு சேர்த்து லேகியம் போல் கிளறிச் சாப்பிட்டு வந்தால் நோய் ஆரம்ப நிலையில் குணமாகிவிடும்.

# ஸ்ரான்லி, குருநகர் அணிகள் வெற்றியீட்டின

மேஜர் முரளி ஞாபகார்த்தமாக மாணவர் பேரவையினால் நடத்தப்பட்டுவரும் விளையாட்டுப் போட்டிகளில் ஓர் அங்கமாக, நல்லூர் கொத்தணி மட்டத்தில் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில், ஸ்ரான்லிக் கல்லூரி கல்வியங்காடு செங்குந்தா வித்தியாலய அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வென்று நல்லூர் கொத்தணி சாம்பியன் ஆனது. நடுவராகக் கப்டன் டீ ஏ எம். குணசிங்கம் கடமையாற்றினார்.

யாழ். நகர் கொத்தணி பாடசாலைகளுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் பாஷையூர் சென் அந்தனீஸ் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றபொழுது குருநகர் சென் ஜேம்ஸ் வித்தியாலய அணி அதனை எதிர்த்தாடிய சென்சாள்ஸ் வித்தியாலய அணியை வென்று சாம்பியன் ஆனது. நடுவராக எஸ். எம். புவேந்திரன் கடமையாற்றினார். 1g

# கனேடிய பாராளுமன்றத்தில் கியுபெக் பற்றி விவாதம்

கனடா நாட்டின் பிரெஞ்சு மொழி பேசும் கியுபெக் மாகாணத்தின் அதிகரித்த அரசியல் சுயாட்சிக் கோரிக்கையை விவாதிக்க கனேடிய பாராளுமன்றத்தின் அவசர கூட்டம் ஜூலை 15 ஆம் திகதிக்கு பிரதமர் பிரையன் மல்றோனியினால் அழைக்கப்பட்டுள்ளது.

கனடா நாட்டின் ஒற்றுமைக்கு அச்சுறுத்தலாக உள்ள இக்கோரிக்கை பற்றியும் அரசியலமைப்பு மாற்றம் பற்றியும் ஏனைய ஒன்பது ஆங்கிலம் பேசும் மாகாணங்களின் முதலமைச்சர்களுடனும் பிரதமர் மல்றோனி ஆலோசனை நடத்தியுள்ளார்.

இவர்கள் ஒரு இணக்கமான தீர்வுக்கு வராத பட்சத்தில் பிரதமர் மல்றோனி தாமே தீர்வை முன்வைக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

கனடாவுடனான நூற்றி இருபத்தைந்து வருட கூட்டமைப்பிலிருந்து விலகி விடப் போவதாக பயமுறுத்தும் கியுபெக்கின் எதிர்காலத்தை நிர்ணயிக்க சர்வஜன வாக்கெடுப்பொன்றை எதிர்வரும் ஒக்டோபர் இருபத்திஆறாம் திகதி நடத்த தீர்மானித்துள்ளது.

# ● கெற்பெலி தொண்டர் ஆசிரியர் நியமனக் கடிதம் வழங்கக் கோரிக்கை

கெற்பெலியில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாமில் இயங்கி வரும் பாடசாலையில் சாவகச்சேரி கோட்டக்கல்வி நிலையத்தினூடாகவும் வலயக் கோட்டக்கல்வி நிலையத்தினூடாகவும் நேர்முகப் பரீட்சை நடத்தி நியமிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு உரிய நியமனக் கடிதங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இதன் அதிபராகக் கடமையாற்றும் திரு பொ. கனகரத்தினம் யாழ் செயலக திட்டமிடல் பணிப்பாளரை கடிதம் மூலம் கோரியுள்ளார்.

இப்பாடசாலையில் இவ்வாறு இருபது பேர் தொண்டர் ஆசிரியர்களாக கற்பிப்பதாகவும் இவர் தெரிவித்துள்ளார். (15)

# குடிநீர் வசதி

பொதுமக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் போக்கும் முகமாக யாழ் குருநகர் சென் றோக் சனசமூக நிலையம் குழாய்க் கிணறொன்றை அமைத்துள்ளது.

இக் குழாய்க் கிணறு நிலைய வளவில் அமைக்கப்பட்டுப் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்துவைக்கப்பட்டுள்ளது. 14

# இன்றும் நாளையும்

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வருடா வருடம் நடத்தப்பட்டுவரும் மெய்வல்லுநர் போட்டிகள், இவ் வருடமும் கன்னாகம் கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன. (16)

# மெய்வல்லுநர் போட்டி

சுழிபுரம் வடக்கு குறுமுக வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமையன்று நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் திரு ச சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இப் போட்டியில் பிரதம அதிதியாகப் பண்டத்தரிப்புக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலந்துகொள்வார். 13

# ரூபா மதிப்பிறக்கம் இல்லை அமைச்சுக்கள் அறிவிப்பு

ரூபா மதிப்பிறக்கம் செய்யப்பட மாட்டாது என நிதி கொள்கைத் திட்டமிடல் அமைச்சுக்கள் நேற்றுத் தெரிவித்தன.

இலங்கை வந்திருந்த சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் அதிகாரிகள் குழு அரசாங்கத்திற்குப் புதிதாக எவ்வித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை என்று நிதி கொள்கைத் திட்டமிடல் அமைச்சுக்களின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய 'ஐலண்டில்' சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் கூடுதலான நிபந்தனைகள் என்று வெளியான முற்பக்க செய்தி பற்றியே அதிகாரிகள் இம் மறுப்பைத் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் அனுமதியைக் காத்திருக்கொண்டு அதிகாலிக சீர் திருத்தத் திட்டம் ஒன்றுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது வரவு - செலவுத் திட்ட துண்டு விழும் தொகையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 8 சதவீதமாகக் கட்டுப்படுத்த வேண்டும் எனத் தூதுக்குழு கேட்டிருந்தது.

சென்மதி நிலுவையில் உள்ள தற்போதைய பற்றாக்குறை 6 6 சதவீதத்திற்குக் கூடுதலாக இருக்கக் கூடாது ரூபா மதிப்பிறக்கத்தைக் குறைக்க வேண்டுமென்றும் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்பனவற்றின் குழு கேட்டுள்ளதாக ஐலண்டின் இச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# "ஜே. வி. பி. ஒழிப்பு" படுகொலை பாணியில் தென் தமிழீழத்தில் படுகொலைகள்

கடந்த ஒரு வாரத்தில் வெளிவந்த மூன்று செய்திகள் மட்டக்களப்பில் மட்டும் சுமார் முப்பத்தேழு தமிழர்கள் ஆயுதப் படையினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றன.

இக்கொலைகள் எல்லாமே கொடூரமான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளன. முக்கியமாக கடைசியாகப் படுகொலை செய்யப்பட்ட நாலு தமிழர்களின் சடலங்கள் வீதியோரங்களில் வீசப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தென் தமிழீழத்தில் ஆயுதப் படையினரின் அட்டூழியங்களையும் தமிழர் அழிப்பு நடவடிக்கைகளின் மிக அண்மைக்கால சான்றுகளாக இப் படுகொலைகளை எடுத்துக் கொள்ளலாம். விடுதலைப் புலிகளுக்கெதிரான நடவடிக்கை என்றபோர்வையில் அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் இங்கு படுகொலை செய்யப்படுகின்றனர்.

இவையெல்லாம் சிறிலங்காவின் தெற்கு, மத்திய, மற்றும் வடமத்திய பகுதிகளில் ஜே. வி. பி. கிளர்ச்சியாளர்களை நசுக்குதல் என்ற போர்வையில் அப்பாவிச் சிங்களவர்களைக் கொன்று குவித்த நடவடிக்கைகளை நினைவுபடுத்துகின்றன.

இவ்வாறு கொல்லப்பட்ட இளைஞர்களதும் யுவதிகளதும் உறவினர்கள் ஜூலை இருபத்தி மூன்றாம் திகதி நடத்திய பேரணி கடந்தகால நிகழ்வுகளை நினைவு படுத்தின. விக்கி அழுதவர்களும், விம்மி அழுதவர்களும், மயங்கி வீழ்ந்தவர்களும், மரணத்தைத் தழுவிக்கொண்டவரும் இப் பேரணியில் பங்குபற்றினர்.

## எஸ். ஜி. எம்.

அன்னையர் முன்னணியின் இந்த பேரணி பற்றி கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களும் மதத் தலைவர்களும் ஜே வி.பியினரால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட வேளையில் மனித உரிமைகள் பற்றிப் பேசுபவர்கள் என்ன செய்தார்கள்? பாதயாத்திரை நடத்துபவர்கள் என்ன செய்தார்கள்? என்க் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த கருத்தின் மூலம் சட்டத்திற்குப் புறம்பான கொலைகளை ஜனாதிபதி நியாயப்படுத்த முயல்வது தெரிகிறது.

ஜே வி.பி நடவடிக்கைகளின் சரி பிழை ஒரு புறமிருக்க, நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டிய அரசியல் சட்ட பொறுப்பைக் கொண்டுள்ள அரசாங்கம் சட்டத்திற்கு புறம்பாக படுகொலைகளில் எவ்வாறு இறங்கலாம் என்ற கேள்வி எழுகிறது.

சிறிலங்காவில் தனது படுகொலை நடவடிக்கைகளை திறமையாக நிறைவேற்றிய ஆயுதப் படையினர் இப்பொழுது தென் தமிழீழத்திலும் இந்தக் கொடுமையான நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

"தமிழ் மக்களின் பிரதிநிதிகள்" எனக் கூறிக் கொள்ளும் பல குழுக்கள் கொழும்பில் தாமும் இருப்பதாகக் கூறிக் கொள்கின்றன. அவைகள் ஏன் இந்த விடயம் பற்றி மௌனம் சாதிக்கின்றன என்று தெரியவில்லை தமது தனிப்பட்ட பாதுகாப்புக்காக தமிழினத்தின் பாதுகாப்பை இவர்கள் தாரைவார்த்து விட்டனர் என்றே தெரிகிறது.

தென் தமிழீழப் படுகொலைகள் தொடரக்கூடிய அபாயம் இருப்பதால் முழுத் தமிழினமும் இதற்கெதிராக குரலெழுப்ப வேண்டியது அவசியம்.

# இளவாலை, முள்ளானை பகுதியில் வெற்றிலை திருட்டு

இளவாலை, முள்ளானைப் பகுதியிலுள்ள வெற்றிலைத் தோட்டங்களில் வெற்றிலைகள், ஆட்கள் இல்லாத நேரத்தில் திருடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கை அச்சம் காரணமாக இப் பகுதி மக்களில் அதிகமானோர் வேறு தூர இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. 13

# சேவா வனித பிரிவுக்கு போதிய வசதிகள் இல்லை

சேவாவனிதா பிரிவின் தலைவியான திருமதி ஹேமா பிரேமதாசவுக்கு வசதிகள் கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இந்தப்பிரிவுக்கு அலுவலகம் தொலைக்காட்சி, செயலாளர் உதவியாளர் போன்றவை தனக்கு இல்லை எனச் செய்தியாளரிடம் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆரின் மனைவி சேவா வனிதா பிரிவுக்கு தலைவியாக இருந்த போது கிடைத்த வசதிகள் தமக்கு இல்லையெனக் கவலையுடன் தெரிவித்ததாக ஐலண்ட பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# சுவாமிநாதன் மீண்டும் தெரிவு

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாராளுமன்றக் குழுவின் தலைவராக ஜி. சுவாமிநாதன் நேற்று முன்தினம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். 13

# நைஜீரியத் தேர்தல்

நைஜீரியாவில் பொதுத் தேர்தல் அமைதியாக நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆங்காங்கே சில குழப்பங்கள் ஏற்பட்ட போதிலும் பொதுவாக அமைதி நிலவியதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

★ கல்விப்பணிப்பாளர் அறிவிப்பு

## 190 நாள்களுக்கு பாடசாலை நடைபெறவேண்டும்

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளிலும் ஜனவரி முதல் ஆனி மாதம் 30 ஆம் திகதி வரை 97 நாள்களும் ஆவணி முதல் டிசம்பர் வரை 93 நாள்களுமாக மொத்தம் 190 நாள்கள். 1992 ஆம் ஆண்டில் பாடசாலைகள் ஒழுங்காக நடத்தியிருக்க வேண்டுமென யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் சகல அதிபர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

மொத்தம் 93 நாள்கள் பாடசாலை வேலை நாள்களாகக் கொள்ள வேண்டுமென்றும் இத் தொகையினை தவறவிட்டவர்கள் சனிக்கிழமைகளில் பதில் பாடசாலைகள் நடத்தி நிறைவு செய்ய வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

எக்காரணம் கொண்டும் பாடசாலை நாள்களின் தொகை 190க்கு குறையக் கூடாது எனவும் தெரிவித்துள்ளார். 18

★ 1990 உயர்தரப்பரீட்சை தொடர்பாக

# அமைச்சின் தீர்மானத்தை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்ய முடிவு

1990 ஆம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த உயர்தரப் பரீட்சையை வெவ்வேறாக மதிப்பீடு செய்வதான ஸ்ரீலங்கா உயர்கல்வி அமைச்சின் தீர்மானத்தை எதிர்த்து கொழும்பு உயர்நீதி மன்றில் வழக்கு தாக்கல் செய்வது எனவும்.

இதற்கான நிதியை யாழ் மாவட்டத்தில் இயங்கும் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கம் தனியார் கல்வி நிறுவனங்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் மூலம்பெறுவது எனவும்

நேற்று நடைபெற்ற மாணவர் நடவடிக்கைக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது இந்துக்கல்லூரியில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு கப் பகுதியைச் சேர்ந்த பலரும் பங்கு பற்றினர்

கொழும்பில் இந்நடவடிக்கை தொடர்பாக ஒழுங்குகளை மேற்கொள்ள ஐந்து பேர் கொண்ட செயற்குழுவும் நியமிக்கப்பட்டது

தமிழ பகுதிகளில் பொதுப் பரீட்சை நடத்த முடியாத சூழ் நிலையில் நாடு முழுவதும் பரீட்சையை நடத்தக்கூடாது எனக் கோருவது எனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. 15

## வெற்றிலைக்கேணி கடலில் கப்பல் தொடர்ந்து நிற்கிறது

வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் பாரிய தாய்க்கப்பல் தொடர்ந்து தரித்து நிற்கின்றது இக் கப்பல் இடையிடையே கரைப் பகுதிக்கு வந்துசெல்வதாக தெரியவருகின்றது

இதேவேளை உடுத்துறை, ஆழியவளை ஆகிய பகுதிகளை நோக்கி தினமும் கடற்படைக் கப்பல்கள் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றன 24

## விசர்நாய்க்கடியில் இருவர் மரணம்

யாழ். பெரியாஸ்பத்திரியில் விசர்நாய்க் கடிக்குள்ளாகி இருவர் உயிரிழந்திருக்கின்றனர்.

மேலும் ஒரு சிறுவன் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ். பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

நேற்று முன்தினம் பருத்தித்துறை ஓடக்கரையைச் சேர்ந்த சின்னத்துரை திருச்செல்வம் (35) என்பவரும் கொழும்புத்துறை மணியந் தோட்டத்தைச் சேர்ந்த பெண்டில் ஞானரத்தினம் (45) என்பவரும் நேற்று மரணமானார்கள்

உரிய முறையில் விசர் நாய்க்கடி தடுப்பூசி மருந்தினை பெறாததனாலேயே பாதிக்கப்பட்ட நிலையில் மரணமாகியுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் திருநெல்வேலியில் இளம் குடும்பப் பெண் ஒருவரும் மரணமானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 11. 07

## மண்டைதீவு படைஷெல்தாக்கு

மண்டைதீவு படையினர் நேற்றுக்காலை 6 மணியளவில் மேற்கொண்ட ஷெல் தாக்குதலினால் கொட்டடிப் பகுதியில் இருவீடுகள் சேதமடைந்துள்ளன.

இதே சமயம் நேற்று பிற்பகல் தெல்லிப்பழை பகுதியிலும் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

## ஆஸ்பத்திரி இயங்குகிறது

குண்டுச்சத்தங்களுக்கும் பீரங்கித்தாக்குதல்களுக்கும் மத்தியில் மருதங்கேணி வைத்தியசாலை இயங்கி வருகிறது.

வைத்திய அதிகாரி தாக்குதல்களைப் பொருட்படுத்தாது இப்பகுதி மக்களுக்கு சேவை செய்து வருகின்றார். 24

## ஆலயங்கள் மீது குண்டுவீச்சு ஜனாதிபதி கவலை

தெல்லிப்பழை, முல்லைத்தீவு பகுதிகளில் இந்து ஆலயங்கள் மீது அரச படைகள் தாக்குதல் நடத்தியதற்கு ஜனாதிபதி பிரேமதாசா கவலை தெரிவித்துள்ளார்

ஜனாதிபதி கடிதம் மூலம் இக்கவலையை வெளியிட்டதாக இந்துசமயப் பேரவை வட்டாரங்களை ஆதாரம் காட்டி ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

## கந்தலம ஹோட்டல் திட்டத்தை எதிர்த்து சத்தியாக்கிரகம்

கந்தலமவில் அமைக்கப்படவிருக்கும் உல்லாசப் பயணிகள் ஹோட்டல் அமைக்கும் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் எதிர்வரும் பன்னிரண்டாம் திகதி தம்புள்ளையில் சத்தியாக்கிரகம் நடைபெறவுள்ளது.

இத்திட்டம் காரணமாக பௌத்த பிக்குகள் மத்தியில் அரச எதிர்ப்பு உணர்வுகள் அதிகரித்துள்ளன பௌத்த பிக்குகளின் முக்கிய அமைப்புகள் பலவும் இச்சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். சுமார் இரண்டாயிரத்து முந்நூறு பிக்குகளும் இதில் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பல்கலைக்கழக மாணவர்களும் கத்தோலிக்க மதப் பிரதிநிதிகளும் சர்வோதயம் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களும் இச்சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளவுள்ளன.

# அலம்பில் படையினர் மீண்டும் ராணுவ நடவடிக்கை முஸ்தீபு

அலம்பில் பகுதியில் உள்ள படையினர் மீண்டும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது

தற்போது குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் பலவேகய-2 இராணுவ நடவடிக்கையில் பலத்த எதிர்ப்பைக் காட்டும் புலிகளை திசைதிருப்பலாம் என்று கருதியே மீண்டும் அலம்பில படையினர் நடவடிக்கைகளை ஆரம்பிக்கத் திட்டமிடுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது

இதன் முதற்கட்டமாக அலம்பிலில பெருமளவு படையினர் கடற்படைக் கப்பல்கள் மூலம் கொண்டுவந்து குவிக்கப்படுகின்றனர் கடலிலும் கடற்படை படகுகளில நடமாட்டமும் காணப்படுகிறது

கடந்த மாத ஆரம்பத்திலும் அலம்பில படையினர் மேற்காக குமிழமுனை நோக்கி முன்னேற பல தடவை முயற்சித்து புலிகளின் எதிர்ப்பினால் அதைக் கைவிட்டது குறிப்பிடத்தக்கது

## விம்பிள்டன் ரென்னிஸ் ஸ்ரெபிகிறாப்மீண்டும்சம்பியனானார்

நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு ரென்னிஸ் இறுதி ஆட்டத்தில் ஜேர்மனியின் ஸ்ரெபி கிறாப் மீண்டும் சம்பியன் பட்டத்தை தக்க வைத்துக் கொண்டார்.

22 வயதான ஸ்ரெபி கிறாப் 18 வயது நிரம்பிய அமெரிக்க வீராங்கனை மொனிக்கா ஷெலெசை 6 - 2 6 - 1 என்ற நேர் செற் கணக்கில் வென்றார்.

ஸ்ரெபி கிறாப் 1988, 1989 1991 ஆம் ஆண்டுகளிலும் விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை வென்றவர் தற்போது நான்காவது முறையாக பெண்கள் ஒற்றைய பிரிவு சம்பியனாகியுள்ளார்

முதல்தர வீராங்கனையான மொனிக்கா ஷெலஸ் விம்பிள்டன் ரென்னிஸ் போட்டிகளில் இம்முறையே முதன் முதலில் கலந்து கொண்டார் இதற்கு முந்திய போட்டிகள் எதிலும் அவர் தோல்வியுறவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது

## அகாஸி சாம்பியன்

நேற்று விம்பிள்டனில் நடைபெற்ற ஆண்கள் ரெனிஸ் ஒற்றையர் இறுதியாட்டத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த அன்றி அகாஸி வெற்றிக் கேடயத்தை தட்டிச் சென்றார். இவர் குரோவேசியாவைச் சேர்ந்த கொரானி இவான் என்பவருடன் மோதினார்,

அகாஸி 6 7, 6-4, 6-4 1-6, 6-4 என்ற செற்கணக்கில் கொரானியை தோற்கடித்தார் கொரானி சிறப்பாக விளையாடியபோதும் அகாஸியின் ஆட்டம் அபாரமாக இருந்தது. இருவரும் விம்பிள்டன் போட்டியின் இறுதியாட்டத்தில் பங்குபற்றியது இதுவே முதற்தடவையாகும்.

## விலை வீழ்ச்சி

புத்தளம், கற்பிட்டி, வவுனியா ஆகிய இடங்களிலிருந்து பெருமளவு வெங்காயம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து வெங்காயத்தின் விலை கொழும்பில் வீழ்ச்சி அடைந்துள்ளது

## பாடசாலைகள் இயங்கவில்லை

வடமராட்சி கிழக்கின் எல்லைப் புறங்களில் பாடசாலைகள் இயங்க முடியாத நிலையில் இருப்பதாக பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

குறிப்பாக உடுத்துறை, மருதங்கேணி, தாளையடி செம்பியன்பற்று ஆகிய பகுதிகளில் பதற்ற நிலை காரணமாக மாணவர்கள் பாடசாலைக்கு செல்வது மிகவும் குறைவாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

சில பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. 24

## மிகிந்தலை கம் உதாவ

அடுத்த 15ஆவது கம்உதாவ நிகழ்ச்சி மிகிந்தலையில் நடைபெறும் மொனராகலையில் இவ்வாண்டு நடைபெற்ற கம் உதாவ இறுதி நாள் நிகழ்ச்சியில் ஜனாதிபதி பிரேமதாஸ இத்தகவலை வெளியிட்டார்.

## கொழும்பு பயணிகள் முரசுமோட்டையில்

கொழும்பிலிருந்து வந்த யாழ்ப்பாணப் பயணிகள் அநேகமானோர் முரசுமோட்டை, பூநகரி நல்லூர்ப் பகுதிகளில் தங்கியிருக்கின்றனர். 07

# வடபகுதி யுத்தம் குறித்து தெற்கில் அக்கறை குறைவு

வடக்கில் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தம் பற்றி தெற்கிலுள்ள மக்கள் அதிகம் அக்கறை காட்டவில்லை, இது இப்பொழுது மிகவும் சாதாரண விஷயமாகி விட்டது என லக்திவ சிங்களப் பத்திரிகையின் இணையாசிரியர் ஹேரத்கொட பி. பி. ஸிக்கு தெரிவித்தார்

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் டெயிலி நியூஸ் போன்ற பத்திரிகைகள் அநேகம் விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாக கூறியிட்டு சில இராணுவத்தினரும் கொல்லப்பட்டதாக செய்தி வெளியிடுகின்றன இச் செய்திகள் பற்றியும் தென்பகுதி மக்கள் அக்கறை கொள்வதில்லை.

சேர்க்கப்படாமை ..

கப்பட்டுள்ளனர். எனினும் கூர்க்கா தேசிய விடுதலை முன்னணியினர் அழைக்கப்படவில்லை.

நேபாளி மொழிக்குப் பதில் கோர்க்காளி மொழியே எட்டாவது அட்டவணையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென கூர்க்கா தேசிய விடுதலை முன்னணித் தலைவர் சுபாஷ் கிஷிங் கருதுகிறார்.

சுபாஷ் கிஷிங் கூர்க்காலாந்து தனிநாடு கோரிக்கையை மீண்டும் எழுப்புவதற்கு இதுவும் ஒரு காரணமெனக் கூறப்படுகிறது.

வை - 8...

வீழ்த்தப்பட்ட விமானத்தின் சகல பாகங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன விமானியின் சடலம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது.

1990 இல் கோட்டை மீட்பதான ஒப்பரேஷன் போர்ப் இராணுவ நடவடிக்கையின் போதும் விமானப்படையின் இத்தாலிய தயாரிப்பான சியாமாசெற்றி குண்டு வீச்சு விமானம் ஒன்றும் புலிகளினால் மண்டைதீவு கடலினுள் சுட்டு வீழ்த்தப்பட்டது நினைவிருக்கலாம்.

இராணுவ...

உள்ளாரா என்று பத்திரிகைகள் மாறிமாறி புதிய செய்திகள் வெளியிட்டனவாம்.

ஐலண்ட் பத்திரிகை, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கவும் கொழும்பிலுள்ள தமிழ்க்குழு ஒன்றும் தம்மிடம் கூறியதாக விடுதலைப் புலிகள் கெரில்லா யுத்தத்தைத் தொடர்வதற்காக காடுகளினுள் தப்பிச் சென்று விட்டதாக தலைப்புச் செய்தியையும் வெளியிட்டது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லக்ஷமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 06-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது